[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 9

திரு. ஏ. சேனாபதி கவுண்டர் அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரையிலும், 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியிலிருந்தும், மற்றும் 1962ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையிலும் மதுரை மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச்சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1980ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நான்கு முறை மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திருமதி கே.பி. ஜானகி அம்மாள் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றியுள்ளார்.

அனைவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்கள் அனைவர்க்கும் அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் அமைதியாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள். வினா எண் 119 திரு. ம.சின்னசாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

119—

மாநில அரசுத்துறை செலவுகளில் சிக்கன நடவடிக்கை

*6106 திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசுத் துறைகளின் செலவுகளில் ஐந்து விழுக்காடு சிக்கன நடவடிக்கை அறிவித்திருப்பதை மாநில அரசு அறியுமா ?

[1992 மார்ச் 9]

(ஆ) ஆம் எனில், மாநில அரசும் அத்தகைய சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இம்மாநில அரசும் அத்தகைய நடவடிக்கையை அமல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் போல் மாநில அரசும் சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்தத் துறைகளில் எப்படி, எவ்வளவு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள், அதனாலே ஆண்டுக்கு எவ்வளவு பணம் அரசுக்கு மிச்சமாகப் போகிறது என்பதை அமைச்சர் விளக்கமாக அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் ஒரு நடவடிக்கையாக அரசு திட்டம் சாராத மற்றும் சம்பளம் சாராத செலவினங்களில் 10 சதவிதம் சிக்கன நடவடிக்கையை அமுல்படுத்துவது என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் தேதி இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு எல்லா துறையினருக்கும் அனுப்பப்பட்டுக் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப் பட வேண்டும் என்று கூறப்பட்டு இருக்கிறது. அவ்வாணைகள் ஒய்வூதியம் மற்றும் வட்டி செலுத்துதல் போன்ற செலவினங்களுக்குப் பொருந்தி வராது. ஆனால் எவ்வளவு இந்த ஆண்டு மிச்சப்பட்டது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் தனியாக கணக்கெடுத்துச் சொல்ல முடியும்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கனமாக இருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சம்பளம் வாங்காமல் பணியாற்றுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அதைப் போல சிக்கனத்திற்கு அடையாளமாக நம்முடைய அமைச்சர் பெருமக்களும்குறிப்பாக சிக்கனத்தினுடைய சின்னமாக இருக்கிற பெரியாருடைய சீடரான டாக்டர் நாவலர் அவர்களாவது சம்பளம் வாங்காமல் பணியாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேரும் இதற்கு எடுத்துக்காட்டாக இருந்து, முன்னுதாரணமாக இருந்து, அவர்களின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வேண்டுகோளை வைப்பதன் காரணமாக, நீங்கள் இந்த வழியில் வழி நடத்திச் செல்ல வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஒருமித்த முடிவிற்கு வருவீர்களேயானால், உங்கள் வழியைப் பின்பற்ற, அமைச்சரவை ஆயத்தமாக இருக்கும். (பலத்த சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊதியம் பெறுகிறவர்கள் அத்தனை பேரும் தந்தை பெரியார் வழியில் செல்லுகிறவர்கள் இல்லை என்று உறுப்பினர் முடிவு செய்துவிடக் கூடாது. ஏதோ செய்கிற காரியத்திற்கு ஊதியம் இருக்க வேண்டும் என்று கருதுகிறவர் தந்தை பெரியார். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கன நடவடிக்கை என்ற பெயரால் ரிட்டையர் ஆகியிருக்கிற வேகன்சிகளில் கூட ஆசிரியர்களையும் மற்ற இன அதிகாரிகளையும் நியமனம் செய்ய கூடாது என்று உத்திரவு போட்டதாகச் சொல்லுகிறார்கள். அது உண்மைதானா ? ஆம் எனில், அத்தகைய ரிட்டையர்மென்ட் வேகன்சிகளில் அதிகாரிகளை நிரப்பவில்லை என்று சொன்னால், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிவிடும். ஆகவே அத்தகைய ரிட்டையர்மெண்ட் வேகன்சிகளைப் பூர்த்தி செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிக்கன நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளுகிறபோது, எல்லாத் துறைகளுடைய திறமை எக்காரணத்தைக் கொண்டும் குறையக்கூடாது என்பதை மனதிலே நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது வேலை பார்த்து வருகிறவர்கள், ஒரு பதவியை நாம் எடுப்பதன் மூலமாக அவர்கள் வேலைக்குப் பாதகம் ஏற்படாத வகையில் அவர்கள் தேவைப்படுகிற பிற துறைகளுக்கு மாற்றப்படுகிறார்கள். கூடுமான வரையில் நிர்வாகம் சீராகவும், சிறப்பாகவும் நடைபெற வேண்டும் என்பதிலேயும் அது திறமையாக நடைபெற வேண்டும் என்பதிலேயும், எந்த அளவிற்கு அதிலே பணியாளர்கள் இருக்கலாம் என்பதைப் பொறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஆனால் சில பல துறைகளிலே கூடுதலான பணியாளர்கள் இருந்து வருகிறார்கள் என்ற காரணத்தை யொட்டித்தான் இந்த முறை கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் சுமார் 140 கோடி ரூபாய் சிக்கனப்படுத்தப்படும் என்று அரசு தரப்பிலே அறிவிக்கப்பட்டது. அதைப் பற்றி ஏதேனும் திட்டம் வகுத்து செயல்படுத்தப்பட்டதா ? அதன் மூலம் எவ்வளவு சிக்கனப்படுத்த முடிந்தது ? அதே போல அரசு துறைகளின் சார்பில் வெளியிடப்படுகிற முழுப் பக்க விளம்பரங்களை கால் பக்க விளம்பரங்களாகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டபடி சிக்கன நடவடிக்கைகள் ஓரளவிற்கு எடுக்கப்பட்டு வருகின்றன. எந்தெந்த துறைகளில் எந்த அளவிற்கு எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரம் முழுவதும் இப்போது என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் தரப்படும். ஆனால் கூடுமான வரையில், விளம்பரத்தைப் பொறுத்தவரையில், எந்தெந்தப் பொருள்கள் எந்தெந்த அளவிற்கு விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்ற அளவைப் பொறுத்து சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கூடுமான வரையில் அதிலேயும் சிக்கனம் கடைப்பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 120, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

120—

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் நீதிமன்றம்

* 5840 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இஃது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.